செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்; விரோதி ஸ்ரீ (1889) ஆவணி மீ 28 உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அரு] யாழ்ப்பாணம்:- விரோதிகிருது ஸ்ரீ சித்திரை மீ கஎ உ வெள்ளிக்கிழமை (30-4-1971) [இலக்கம்

# நாவலர் வித்திட்ட திருப்பணி

[திருக்கேதீச்சரத் திருப்பணிக் கிளைச் சபை (குருநாகல்) தலைவர்: டக்டர் ஆ. சுப்பிரமணியம் M. B. B. S. அவர்கள் திருப்பணிச் சபை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் நிகழ்த்திய தலைமையுரை]

திருக் கேதீச்சரநாதனின் திருவருளாலும், கௌரிஅம்பாளின் அனுக்கிரகத்தினுலும் நாமெல்லோரும் இப் புனித தினத்தில் குருநாகல் சைவ மகா சபை மண்டபத்தில் கூடியுருக்கின்றோம். ஒரு பெரும் நோக்கத்துடன், அதாவது திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையின் பிரதேசக் குழு ஒன்றினைக் குருநாகலில் அமைக்கும்பொருட்டு.

இம் முயற்சி எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னேயே தொடங்கி யிருக்கவேண்டும். அது எங்களின் குற்றம். நாமே உங்களைத் தேடிவந்தால் நீங்கள் "திருப்பணி செய்ய எங்களையும் சேருங்கள்; சிவ தொண்டு செய்ய எம்மையும்சேருங்கள் எங்களையும் அங்கத்தவர்கள் ஆக்குங்கள்" என்று இரந்து கேட்டிருப்பீர்கள்.

ஆனல் அதற்கு மாருக நீங்கள் எங்களைத் தேடிவருவது பூனையானது தனது குட்டியைத் தேடிப் பால் கொடுக்கும்வகையில் குரு பக்குவப்பட்ட ஆன்மாவைத் தேடி முத்தியின்பத்துக்கு வழிகாட்டுவது போலிருக்கின்றது.

திருக்கேதீச்சரத்தை நினைக்கும்போது நாம் நாவலர் பெருமானை மறந்துவிடக் கூடாது நாவலர்பெருமான் வாழ்ந்த காலத்தில் சைவ மக்கள் பட்டபாட்டையுன்னிக் கண்ணீர் விட்டார். சகல இசுவரியங்களும படைத்தவர். ஆங்கில அறிவு நிரம்பியவர். சீமைகளுச் சென்று சிவில் சேவில் பதவி வகித்து சீமானுக வாழ்ந்து, மறைந்து போயிருக்கலாம், நாமும் அவரை அறியாதிருப்போம்.

ஆனல், யாழ். மத்திய கல்லூரியில்அடியெடுத்து வைத்தவுடன் அவர் மனம் மாற்றமடைந்தது. "சைவ" மெனும் சீதையைச் சிறை மீட்டன்றி உயிர்வாழேன் என்று உறுதிபூண்டார். நைஷ்டிகப் பிரமசாரியானுர்; சைவம் எனும் செஞ்சாலி யோங்கச் சிறந்த பிரசங்க மழை அயராது பொழியும் அருள்முகிலானுர்.

இப் பெருமானுர் திருக்கேதீச்சரப் புனருத்தாரணத்துக்கு வித்திட்டார். திருக்கேதீச்சரத்தைப்பற்றி அவர் குறிப்பிட்ட ஒரு பகுதி:-

சைவ சமயிகளே! தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களுள் இரண்டுஇவ்விலங்கையிலுள்ளன அவற்றுள் ஒன்றகிய திருக்கேதீச்சரத்திற்கு திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர் திருப் பதிகமொன்றும், சுந்தர மூர்த்தி நாயனுர் திருப்பதிகமொன்றும் இருக்கின்றன. இத் திருக்கேதீச்சரம் இவ் வடமாகாணத்தின்கண்ணுள்ள மன்னுருக்கு அதி சமீபத்தி லிருக்கின்ற மாதோட்டத்திலுள்ளது. திருக்கேதீச்சரம் அழிந்து காடாகக் கிடக்கின்றதே! புதிது புதிதாக இவ் இலங்கையில் எத்தனை எத்தனையோ கோயில்கள் கட்டப்படுகின்றனவே; நீங்கள் இந்த மகா ஸ்தலத்தைச் சிறிதும் நினையாததென்னையோ? இவ் இலங்கையிலுள்ள விபூதிதாரிகள் எல்லோரும் கிறிது சிறிது உபகரிக்கினும் எத்துணைப் பெருந்தொகைப் பொருள் சேர்ந்துவிடும்; இதை நீங்கள் எல்லீருஞ் சிந்தித்து இத்திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின் அருட்கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அனுக்கிரகஞ் செய்வர்."

நாவலர் பெருமான் இதை எடுத்துரைக்காவிடில திருக்கேதீச்சுரம இன்று பொய்யாய் பழங்கதையாய் மறைந்துபோயிருக்கும.

இதைச் செவிசாய்த்து சென்ற நூற்றுண்டின் இறுதிப் பகுதியில பசுபதிச் சேட்டியார் அவர்கள் இத திருப்பணியைத் தொடக்கி வைத்தார். இப் பெருமகனே யாழ். இந்துக் கல்

(வளர்ச்சி 2-ஆம் பகக்ம்)

## நூல் வெளியீடு

கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் அருளிய சிவமந்திர நாதம என்னும அரிய நூலை மில்க் வைற் ஸ்தாபனத்தார் தமது 30வது வெளியீடாக வண்ணை அரசடி விநாயகர் 5-ம திருவிழா அன்று வெளியிடப்பட்டன. ஸ்ரீ ல ஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் அவர்கள் முதல் பிரதியை வாங்கி விழாவைச் சிறப்பித்தனர்.

உ
திருச்சிற்றம்பலம்

ஆருடுசடை முடியனனலாடும்
மலர்க்கைய னிமயப்பாவை
கூருடுதிருவுருவன் கூத்தாடுங்
குண முடையோன்
குளிருங் கோயில்
சேருடு செழுங்கமுநீர்த்
தாதாடி மதுவுண்டு
சிவந்த வண்டு
வேருய வுருவாகிச்
செவ்வழிநற் பண்பாடும்
மிழலையாமே.

திருச்சிற்றம்பலம்
—திருஞானசம்பந்தசுவாமிகள்.

## ஸ்கொற்வீதி, கோலாலம்பூர் கந்தசுவாமி கோயில் சகஸ்ர அஷ்டோத்தர சங்காபிஷேகம்

17-4-71 காலை 11-00 மணிக்கு வாஸ்து சாந்தி அங்குரார்ப்பணம் சங்குஸ்தாபனம்முதலியன ஆரம்பிக்கப்பெற்று மற்றைய கிரியைகளும் விதிப்படி நடைபெற்றன. பல அடியார்கள் அபிஷேகத்தில் பங்குபற்றி முருகப் பெருமானை வழிபட்டனர்.

## ஏழாலை - மத்தி துவாக்கலட்டி வற்றுப்பளை கண்ணகை அம்மன் கோவில் திருவிழா

30-4-71 வெள்ளிக்கிழமை ஏழாலை கண்ணகை அம்மன்கோயில் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகின்றது. இவ்விழா 30-4-71 வெள்ளிக்கிழமை தொடக்கம் 10-5-71 திங்கட்கிழமை சித்திரா பூரணை அன்று தீர்த்தோற்சவத்துடன் பூர்த்தியர்கும்.

இம்முறைவிநாயகப்பெருமான் மூஷிக வாகனத்திலும் முருகப் பெருமான் வள்ளி தெய்வ யானை சமேதராய் மயூரவாகனத்திலும் திருவுலா வரும் காட்சி இடம் பெறும்.

இரவுத் திருவிழாக்களும் பிற்பகல் 4 மணிக்கு முடிவடையக் கூடியதாக ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளது.

(சுன்னுக நிருபர்)

## திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும் சித்தாந்த வகுப்பும்

தர்மபுர ஆதீனத்தில் ஸ்ரீ ஞான புரீசுவர் தேவஸ்தானமகோற்சவம், ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் குரு பூசை விழா வைகாசி 22 ஆம் நாள் முதல் 10 தினங்கள் வரை நிகழ ஒழுங்குகள் செய்யப் பெற்றுள்ளன. இத்தினங்களில்திருநெறிய தெய்வத் தமிழ் மகாநாடும் சித்தாந்த சாஸ்திர பாட வகுப்பும் நடைபெறும். வைகாசி 31-ஆம் நாள் குருபூஜை விழாவும் ஆனி 1-ஆம் நாள் பட்டினப் பிரவேசக் காட்சியும் நடைபெறும்.

- (எமது சிதம்பரம் நிருபர்)

## சிலப்பதிகாரக் காப்பியக் கோயில் ஓர் எழிலோவியம்

திரு. செ. வைத்தியலிங்கன் எம். ஏ., எம். லிட்.
தமிழ் விரிவுரையாளர் (கலைத்துறை) அண்ணுமலைப் பல்கலைக்கழகம்.

வாழும் இலக்கியம் படைக்கின்ற வளமார் புலவர் பெருமக்களால் நாடே பெருமைகொள்கிறது. பலபடச் சிந்தித்துப் பக்குவமாக வடித்தெடுக்கும் பாங்குமிகு எழுத்தோவியங்களால் புலவர்கள் தம் நாடு, இனம், மொழி ஆகியவற்றற்குப் பெரும் புகழ் ஈட்டிவைக்கிருர்கள்; அப்பாலும் சென்று, உலக அரங்கிலே பாராட்டப் பெறுகிருர்கள். அது காரணமாக, அறிவுடைய மக்களினத்திற்கே தம் படைப்புக்களைப் பொதுச் சொத்தாகவும் ஆக்கிவிடுகிருர்கள்; அழியாப் பெருவாழ்வு வாழ்கிருர்கள் அத்தகைய சிறப்புடன் பொலிவுறும் திருவள்ளுவர், இளங்கோவடிகள், கம்பர் முதலியோரைப் பற்றி நாளும் எண்ணுவதும், அவர்கள் தம் சொல் திறங்களை ஆராய்தலும் இலக்கியத் தெய்வத்திற்குக் கற்ருேர் ஆற்றிடும் கவின் மிகு வழிபாடாகும். இந்த அடிப்படை நோக்கத்தோடு ஈண்டு இளங்கோவடிகளின் அளப்பரும் புலமைக் கடலிலே சில துளிகள் சுவைத்திடப் புகுவோம்.

### சிலப்பதிகார நிகழ்ச்சி நுட்பம்:

கற்றவர் நெஞ்சைப் பொறபுடன் அள்ளும் சிலப்பதிகாரத்திலே அக (காதல் - கற்பு) மாட்சி நிரம்பிய கண்ணகி புகார் நகரத்தே மனையறம் தொடங்குகிருள்; கற்புக் கடமையாற்றும் நிலையிலே மதுரை நகரத்தே ஊழ் காரணமாகக் கணவனைப் பறிகொடுத்து, மன்னனிடம் நீதிக்கு மன்ருடுகிருள்; வெற்றி பெற்ற கண்ணகி வீரப்பத்தினித் தெய்வமாய் வஞ்சி நகரத்தே பரவப்படுகிருள். புற (வீரம்) மாட்சி நிரம்பிய சேரன் செங்குட்டுவன் அகமாட்சியால் சிறந்த கண்ணகிக்குக் கற்கோயில் (பத்தினிக்கோட்டம்) கண்டு பணிகிருன். அஃதாவது அகத்தினைப் புறமானது ஏற்றிப் போற்றிப் பணிந்து பரவுகிறது. அகமும் புறமும் தமிழர்தம் வாழ்க்கையின் இருபெருங் கண்களாதலின் அவற்றைப் பேணி மதித்திட எண்ணுகிருர் இளங்கோவடிகள், எனவே, தம் சொற்கோவிலாகிய சிலப்பதிகாரக் காப்பியத்தில் அகமும் புறமும் மாட்சியுடன் குடிகொள்ளுமாறு அமைக்கின்ருர். அன்றியும், துறவறமாட்சி மிகுந்த அவர் மனையற மாட்சிநிறை கண்ணகிக்கு - தெய்வஞ் சான்ற திறல் விளங்கு உருவினளுக்கு -ஏற்றந்தந்து அவளை எழிலோடு காட்டுகிருர். அதனைத் தக்காங்கு நவின்று நவின்று நூல்நயம் கண்டு சுவைப்பது இலக்கியப் பேரின்பத்திற்கு ஏற்ற நல்வழியாகும்; அதுதான் நல்விலக்கியம படைத்த நல்லோர்க்கு நாம் காட்டும் நன்றிக் கடப்பாடுமாகும்.

### மனையறம் படுத்த காதையில்

இளங்கோவடிகள் முற்றத்துறந்த முனிவரே யென்ருலும் அவர்தம் காப்பிய மாளிகையில் காதல் நுட்பங்

(வளர்ச்சி 2- ஆம் பக்கம்)

நல்லை.
ஞான சம்பந்தர் ஆதீனத்தில்

## ஞானசம்பந்தர் உற்சவம்

நல்லை, ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று (30-4-70 வெள்ளிக்கிழமை) ஞானப்பால் உற்சவமும், நாளை பல்லக்கு உற்சவமும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பல இசை நிகழ்ச்சிகள் இடம்பெறும். (ந நி.)

### எங்கள் அறிவித்தல்

சித்திரா பூரணையை முன்னிட்டு எதிர்வரும் 10-5-71 திங்கட்கிழமை இந்துசாதனக் காரியாலயம், சைவப்பிரகாச யந்திரசாலை என்னுமிவற்றில் கடமையாற்றுவோர்க்கு விடுமுறையாதலால் அன்று எவ்வித கருமமும் நிகழாவென்பதை அன்பர்களுக்குத் தெரிவிக்கின்றோம்.

— அதிபர்.

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

விரோதகிருது ஹு சித்திரைமீ கஎ-உ வெள்ளிக்கிழமை [1971]

## புனர் வாழ்வு பெறும் புரட்சிகர இளைஞர்கள்

நாட்டின் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் புரட்சிக்காரர்கள் பலர் தோற்கடிக்கப்பட்டு அரசாங்கத்தினிடம் சரணடைகின்றார்கள். புரட்சி இயக்கத்தைவிட்டு விலகித் தங்கள் பெற்றோரையும் உறவினரையும் சேருகின்றார்கள். கனம் பிரதம மந்திரியவர்கள் அண்மையில் அவர்களுக்குத் தெரிவித்த அறிக்கை இச் சுமுகமான திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் புரட்சிக்காரர் பெரும்பாலும் பதினாறு தொடக்கம் இருபத்தைந்து வயதுக்குட்பட்டவர்களாவர். நீதி யாது? அநீதி யாது? பாவம் யாது? புண்ணியம் யாது? என்ற தத்துவங்களை அவர்களுக்கு விளக்கி அவர்களை அரசநீதியைமதிக்கின்ற பகுத்தறிவுள்ள மக்களாகச் சமூகத்தில் வாழச் செய்யக்கூடிய ஒரு திட்டத்தைச் செயல்முறையிற் கொண்டுவர நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலை அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயகா அவர்கள் தலைமையில் அரசாங்கம் ஒரு குழுவை நிறுவியுள்ளது. இப்புனர் வாழ்வு நிலையம் கங்கொடைவிலவிலுள்ள வைத்தியாலயங்காரப் பல்கலைக் கழக நிலத்தில் அமைக்கப்படும். ஐந்நூறு தொடக்கம் அறுநூறு தொகையுள்ள இளைஞர்கள் ஒரு தவணைப் பயிற்சிக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர். ஒரு குழுவின் பயிற்சி பூர்த்தியான பின் அடுத்த குழு தெரிவு செய்யப்படும். இவ் வியக்கத்தைக் கனம் பிரதம மந்திரியவர்களே ஆரம்பித்து வைப்பார்கள்.

நாட்டினது செல்வம் இளைஞர்களாகும். அவர்கள் கடவுட் பக்தி, அறிவு, அடக்கம், பெரியாரைப் பேணுதல், அரசநீதியைப் பேணுதல் முதலிய பண்புள்ளவர்களாக விளங்க வேண்டும். குறித்த புரட்சி இயக்கத்தில் சேர்ந்தவர்களிடத்தில் இப் பண்புகளில்லாமையினாற்றான் அவர்கள் அவ்வியக்கத்தில் சேர்ந்து துன்பத்தை உண்டாக்குகின்றார்கள். இப் பண்புகளை அவர்கள் உள்ளத்தில் அமைக்கவேண்டிய பொறுப்பு முதலில் பெற்றாரிடம் தங்கியுள்ளது. இரண்டாவது ஆசிரியர்களிடத்தில் தங்கியுள்ளது. இக்கால வாழ்க்கை முறையும் கல்வி முறையும் பெற்றாரும் ஆசிரியரும் தங்களுக்கு உரிய கடமைகளைப் புரிய இடந்தரவில்லை.

இப்பொழுதுள்ள கெடுதியான நிலையில் அரசாங்கம் புரட்சியில் ஈடுபடும் இளைஞர்களுக்குப் புனர்வாழ்வளிப்பது விரும்பத் தக்க செயலாகும்.

## நவாலியூரில் ஒளிர்ந்த இரத்தினத்தை இழந்துவிட்டோம்

நவாலியூர் பண்டிதரத்தினம் திரு. சு. நவரத்தினம் அவர்கள் சிவபதமடைந்த செய்தி யாவரையும் துன்பக் கடலுளாழ்த்திவிட்டது. இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர். வட்டுக்கோட்டைச் சைவாங்கில தலாசாலையிலும் (இப்பொழுது வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி) மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும் திறமையுடன் ஆசிரியராகக் கடமை புரிந்தவர். ஆங்கிலம் சரித்திரம், பூமிசாத்திரம் முதலிய பாடங்களை மாணவர்கள் உள்ளங்களில் நன்கு பதியும்படி கற்பிக்கும் ஆற்றலுடையவர். இளைப்பாறிய பின் சரித்திர நூல்களை ஆங்கிலத்திலும் தமிழ் மொழியிலும் வெளியிட்டனர். "தமிழரும் இலங்கையும" 'ஈழநாட்டுப் புராதன சைவாலயங்கள்" "வன்னியும் வன்னியர்களும" "இலங்கையில் இந்துசமய வரலாறு" போன்ற நூல்கள் அவற்றுளடங்கும். கொழும்பில் வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகைகளுக்கும் "இந்துசாதனம்" தமிழ் ஆங்கிலப் பிரசுரங்களுக்கும் சமயம், சரித்திரம், அரசியல் சம்பந்தமான கட்டுரைகளை விஷயதானமாக வழங்கியுள்ளார்கள்.

அவர்கள் ஆற்றிய அரிய தொண்டினைப் பாராட்டுமுகமாக அவருக்குப் 'பண்டிதரத்தினம்' என்ற கௌரவபட்டம் வழங்கப்பெற்றது. திரு நவரத்தினம் அவர்கள் ஈசுரபக்தி, அடக்கம், சமயாபிமானம், சாதியபிமானம், பாஷாபிமானம் தேசாபிமானம்முதலிய பண்புகள் நிறைந்தவர். வஞ்சகம் பொறாமை முதலிய தீய குணங்கள் அவரிடமில்லை. அவருடைய முகத்தில் தாண்டவமாடிக் கொண்டிருந்த புன்சிரிப்பே அதற்குச் சான்றாகும். அவர் செய்த ஆராய்ச்சிப் பணி தொடர்தல் வேண்டும். அச்சிடாமலிருக்கின்ற அவரது ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளிவரக்கூடிய ஒழுங்குகளைத் தமிழ்மக்கள் கையாளவேண்டும் அவருடைய பிரிவு நமது நாட்டுக்கும் சமயம் மொழி முதலியவற்றுக்கும் பெரும் இழப்பாகும். அவருடைய பிரிவினால் துன்புறுகின்ற அவருடைய மனைவி மக்கள் சுற்றமித்திரர்களுக்கு எங்கள் அநுதாபத்தைத் தெரிவிக்கின்றோம். அவருடைய ஆன்மா சாந்தியடைவதாக.

## சிலப்பதிகாரக் காப்பியக் கோயில்

1ம் பக்கத்து வளர்ச்சி

ளும் களிநடம் புரியுமாறு வாய்ப்பளிக்கின்றார். புகார்க் காண்டத்திலே மனையறம் படுத்த காதையானது சிரித்தாகச் சிந்திக்க வைக்கும் சிறப்பு மிகப்பெற்றது. செந்தமிழ் நலம் பொதுள அமைந்த திறத்தால் நயம் காண்பார்க்கு இன்பவூற்றெனத் திகழ்வது.

வழங்கத் தொலையாத வளத்தினையுடையது புகார் நகரம். அங்கே எழுநிலை மாடத்து இடை நிலத்திலே பன்மலர் விரித்த மணிக்காலமளி காணப்படுகிறது. அதன் மேல் கண்ணகியுடன் கோவலன் அமர்ந்திருந்து இன்பம் துய்க்கிறான். திருமண மக்களுக்குப் பூமணமும் கலவை மணமும் இன்பக் கிறுகிறுப்பை உண்டாக்குகின்ற நேரத்திலே, நல்மணத்தென்றலும மெல்லென வீசி மெய் குளிரவைக்கிறது. இன்பப் பூரிப்பிலே திளைத்து நிற்கின்ற கோவலன் தன் மனம் விட்டு, ஆனால் மனமாரக் கண்ணகியின் நலம் பாராட்டுகின்றான். அஃதாவது இவ்வாறு இவளைப் பாராட்ட வேண்டுமென்று முன்கூட்டியே கருதியிராத பாராட்டுரையினை — குறியாக் கட்டுரையினைத் தன்னியல்பாகக் கூறுகிறான்.

கண்ணகி மாண்பு:

சிவனது பிறையை ஒளி நுதலாகவும் மன்மதனது கருப்பு வில்லைக கரிய இரு புருவங்களாகவும், இந்திரனது வச்சிராயுதத்தினை இடையாகவும், முருகவேளின் நெடிய வேலைக் கண்களாகவும் கண்ணகி கொண்டிலங்குவதாகக் கோவலன் கற்பித்துக் கூறி மகிழ்கின்றான். பின்பு தெய்வமாகப் போற்ற இருக்கும் கண்ணகிக்குத் தெய்வீக உறுப்புக்களை முன்கூட்டியேபடைத்து விட்டால் என்ன, என்று நினைத்துத்தானோ என்னவோ கோவலன் வாய்வழி இளங்கோ இவ்வாறு கூறிவிடுகிறார்!

மேலும் கண்ணகியின் சாயலுக்கு மயில் கூட்டங்கள் தோற்றுக் கானகம்செல்லுகின்றனவாம்; அவள் தன் நடையினைக் கண்டு அன்னப் பறவைகள் நாணி நன்னீர்ப் பண்ணையில் செறிந்த மலரிலே மறைகின்றனவாம்: குழலும் யாழும் அமுதும் குழைத்தாலொத்த அவள் தன் மழலைச் சொல்லுக்குத் தோற்று அவளைவிட்டு நீங்காவாய் வழிபட்டு நிற்கின்றனவாம் கிளிகள் எனவே இவையெல்லாம் அளிக்கத்தக்கன என்று கூறுவதில் கோவலன் களிப்பு மிகப்பெறுகிறான்.

கண்ணகியின் சாயல் (மென்மை) மயிலுடன் உவமித்ததில் பொருளாழம் நிரம்பக் காணலாம். கார் மேக வரவிற்காகக் காத்து நின்று, கண்டதும் கானமயில் களித்திடும்; கணவன் நல்வரவிற்காகக்காத்துநின்று கண்டதும் கண்ணகி நல்லாள் களித்திடும் இயல்பினள். இதனால், உவமை ஓரளவு பொருத்தமாகிறது. அன்றியும் மயிலானது தனக்கு அழகு தரும் தோகைக் கண்களை அவ்வப் பொழுது உதிர்த்துவிடும் இயல்பினது. கண்ணகியும் தன் புற அழகுக் கோலங்களை அவ்வப் பொழுது உதறித் தள்ளும் வாழ்க்கை நெறியினளாக விளங்க இருக்கிறாள். கவிக் குறிப்பாகக் கொண்டு நோக்கினால் உவமைப் பொருத்தம் தெளிவாகப் புலனாகும். இதற்குப் புறச்சான்றாகக் காரைக்காலம்மையார் புராணத்தில் சேக்கிழார் சுட்டியுள்ள செய்யுள் திறத்தினையும் ஒட்டிப் பார்க்கலாம். அஃதாவது, உலகியல் ஆசைகளை - புறக்கோல இன்பங்களை - விட்டொழிக்கும் இயல்பினளாகப் படைக்க இருக்கும் புனிதவதியைத் திருமணக் கோலத்திலேயே மயிலாகத்தான் உருவகித்துக் கூறுகிறார்;-

'தளிரடிமென் னகைமயிலைத்
தாதவிழ்தார்க் காளைக்குக்
களிமகிழ்சுற் றம்போற்றக்
கலியாணம் செய்தார்கள்"

எனபது சேக்கிழார் வாக்கு. கவிஞர்கள் வாக்கினை ஒப்பிட்டுப் பார்த்தலால கிடைக்கும செய்யுள் நுட்பம் இதுவாகும்.

அடுத்ததாக, அன்னப் பறவையின் நடையினை வென்ற நடையினளாகக் கண்ணகி கருதப்படுகின்றாள் 'நடை' என்பது ஒழுக்கம் என்னும் பொருளையும சுட்டும். பாலும் நீரும் பகுத்துணரும் அன்னம்போல, தக்கது தகாதது என்று பகுத்துணர்ந்து ஒழுகும் நீர்மையள் கண்ணகி எனப்பொருள் மாட்சி காணலாம்.

மயிலும் அன்னமும் நாட்டு வளத்தினைக் குறித்திடக் கவிஞர்கள் சுட்டுவது இயல்பு. வில்லிபுத்தூரார் பாரதத்தில்

'அன்ன முங்கிரி மயில்களு
முடன்விளை யாடுநல்
வளநாட்டீர்'

எனக் குறிப்பு வருதலையும் காணலாம்.

மேலும், திரட்சி நோக்காகப் பார்க்கையில் நெய்தல் நிறமாகிய புகார்நகரத்து நங்கையான கண்ணகி இரங்கி ஏங்குவதற்காகவே பிறந்தவளோ என எண்ணவேண்டிவளாகிறாள். மயிலோ குறிஞ்சி நிலப் பொருள்; மயில் கண்ணகிதன் சாயலுக்குத் தோற்றுஓடுமிடமோ முல்லை நிலமாகிய கானம். அன்னப்பறவையோ மருதநிலப் பொருள். சொல்லினிமை கொண்ட கவின்மிகு கிளிகள் (குறிஞ்சி நிலப்பொருள்) கண்ணகியை விரும்பி நீங்காதனவாய் உள்ளன. கண்ணகியும் பத்தினித்தெய்வமாய்த் திருச்செங்கோடு அடைந்தனான்று மலைநாட்டு மக்களால் விரும்பிப்போற்றி வணங்கப்படுகிறாள். அன்றி, இவளும் வாழ்த்துக் - காதையில் 'வென்வேலோன் குன்றில் விளையாட்டு யானகலேன்' என விரும்பிக் கூறுகிறாள். விருப்பமுள்ள இடத்தில்தானே விருப்பம் செல்லும்! இப்படியெல்லாம் நடைபெறுதற்குக் குறிஞ்சி நில அன்னையே குவலயம் போற்றும் கண்ணகிக்குக் குலவுகிளி மூலம் தூதுவிட்டாளோ என எண்ணத் தோன்றுகிறது. ஆக, எவ்வாறோ நானிலங்களும் தொடர்புபடுத்திப் பேசப்படுதலை உய்த்து உணரலாம்.

கற்பில் அருந்ததி. அழகில் திருமகள் என மாதரார் தொழுதேத்தவயங்கியபெருங்குணத்துக் காதலாளாகிய கண்ணகி தெய்வத் தன்மையள். அவளுக்கு அணிகள் அணிந்தும். மலர்கள் புனைந்தும், தொய்யில் எழுதியும் மகளிர் அழகு செய்தல் தேவைதானோ என்று அங்கலாய்க்கிறான் கோவலன். இயற்கை அழகினைச் செயற்கை அழகு வெற்றி கொண்டு விஞ்சி நிற்குமா, என்ன? "அழகு இவளைத் தவம் செய்து பெற்றது காண்" என்று சானகியை நோக்கிக் கூறியதுபோலக் கண்ணகியையும் நோக்கிக் கூறிவிடலாம்.

(வளரும்)

### அருளாட்சியின் 27-ஆவது ஆண்டு துவக்க விழா

திருககயிலாயபரம்பரைததருமபுரம் ஆதீனம் 25 ஆவது பட்டம் பெற்று இதுவரையிலும் அருளாட்சியை நடத்தி வருகின்றவரும், 2 கோடி ரூபாய்க்கு மேல் நல்லறங்களைச் சமயவளர்ச்சிக்காகச் செய்து பொது மக்களினது பெரும்பாராட்டுதல்களைப் பெற்றுள்ளவருமான ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் (ஞான பீடமேறியதினம்) அருளாட்சியின் 27 ஆவது ஆண்டு துவக்கவிழா, சித்திரைச சதயம் அப்பர் குருபூசை நன்னாளன்று ஆதீனத்தில் வைதீக சடங்குகளுடன் சிறப்புற நடைபெற்றது.

ஆதீனத்தின் சிவாலயங்களில் விசேஷ அபிடேக ஆராதனைகள் நடத்தி பல சிவாச்சாரியர்கள் வருகை புரிந்து ஞான பீடத்தில் எழுந்தருளியுள்ள குருமகா சந்நிதானமவர்களுக்கு ஆசீர்வாதங்களுடன் பிரசாதங்கள் வழங்கினார்கள். பல பகுதிகளிலிருந்தும் பிரமுகர்கள் வருகை புரிந்து மாலைகள் அணிவித்து நல்லாசிகளுடன் அருள் பிரசாதங்கள் பெற்றனர்

- (எமது சிதம்பரம் நிருபர்)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழ. இல: M B 11365

வைரவி மார்க்கண்டு அரியாலை —வழக்காளி

எதிராக

1. ஞானப்பிரகாசம் வரப்பிரகாசமும் மனைவி
2. கலலம்மாவும். இருவரும் கொழும்புத்துறை யாழ்ப்பாணம் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11365-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1971-ம் ஆு வைகாசி மாதம் 15-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல்வட்டி ரூபா 8000/-ம் 11-1-70 தொடக்கம் 9-6-70 வரைக்கும் ரூபா 4000-க்கு 15 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 464-60 ரூபாய் 150/- கழிதது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணப்பகுதி, யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கண்டிக்குளிக் கோவிற்பற்று கொழும்புத்துறை உறை பயிற்றம் புலம் விபர 4 குழி 9ம் வீடும். செய்பயிர் வான்பயிர்களும் இந்த நிலப் பரப்பு நாலுக்கும் குழி ஒன்பதுக்கும் எல்லை கிழக்கு மனவல் ஞானப்பிரகாசத்தினதும் பங்காளரினதும் ஆதனம். வடக்கு மைக்கேல் இரத்தினத்தினதும் மனைவி பிரகாசமாவினதும் ஆதனம். மேற்கு மைக்கேல் இரத்தினத்தினதும் மனைவி பிரகாசம்மாவினதும் ஆதனமும் ஒழுங்கையும். தெற்கு ஒழுங்கை. இதடங்கலும். இதற்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்.

பதவு இலக்கம் D 282/99.

'கலையில்லம்'' கலைமணி பொ. செல்வக்குமாரசுவாமி
அராலி வடக்கு, கொமிசனரும், விலைமதிப்பாளரும்
வட்டுக்கோட்டை.
20-4-71 எம். 21 30-4-71

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இலக்கம் M B 10431

வீரசிங்கம் கைம்பெண் மாணிக்கவல்லி நம்பர் 103 கொலம்பகாம் ரோட் கொழும்புத்துறை நம்பர் 1827 D C வழக்கில் தத்துவ வழக்கில் தத்துவகாரி — வழக்காளி.

எதிராக

1. சிவகுரு கந்தவனம் மனைவி 2 சிவபாக்கியம் இருவரும் முதலாம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 10431-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1971-ம் ஆு வைகாசி மீ 26-ம் உ புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 4845/-ம் 11-11-68 தொடக்கம் 27-9-69 வரைக்கும் ரூபா 3000/— க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 296-27. இதில் ரூபா 3000- கொடுபட்டது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கண்டிக்குளிகோவிற்பற்று கொழும்புத்துறை ''பறங்கி வழவும், குடியிருப்பு வளவும்'' பரப்பு லிலலாச்சம் (5) ஐந்து. குழி (5¼) ஐந்தே காலும் வீடுகளும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும், இதற்கெல்லை கிழக்கு ரோட்டு வடக்கு வேலுப்பிள்ளை தில்லையம்பலத்தின் ஆதனம். மேற்கு தம்பர் வயித்தியாப்பிள்ளையின் ஆதனம். தெற்கு வயிரமுத்து வைத்திலிங்கத்தின் ஆதனம், இதடங்கலும் அதற்குச் சேர்ந்தவைகளும்.

''கமலபதி'' மு. நவரத்தினராசா
ஆஸ்பத்திரிவீதி, கொமிசனரும், விலைமதிப்பாளரும்,
மண்டைதீவு, 21-4-71 எம். 24 30—4—71

---

## கோட்டு விற்பனவு விளம்பரம

யாழ்ப்பாணம் இல 4 ஸ்ரீ வெங்கடேசன்வீதி நாராயணசாமி சிவஆனந்தன் —வழக்காளி.

வழ. இல: M B. 9544 எதிராக

யாழ்ப்பாணம் திருநெல்வேலி வடக்கு சைவப்பாடசாலை ஒழுங்கை நாகமுத்து கந்தையா —எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக்கோட்டின் M B 9544-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணிகளை 1971-ஆம் ஆு ஆனி மாதம் 7-ஆம் திகதி (7-6-71) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 16300/—ம் 4-11-67 தொடக்கம் இக் கோட்டின் தீர்வை நாள் 14-12-6 வரைக்கும் ரூபா 10,000 க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 489-ம் சதம் 72.

### ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று கொககுவில் இறை கரம்பன் ஓடை' பரப்பு லிலலா 4 ம் குழி 10, 5/8 ம் கிழக்கு எல்லைப்பக்கமாய் இருக்கும் கிணற்றில் ½ பங்கும். எல்லை கிழக்கு கடனுளியின் ஆதனம். வடக்கு சி. செல்லையாவின் ஆதனம். மேற்கு இரட்டினவேல் பெண் இரட்னேஸ்வரியின் ஆதனம். தெற்கு ரோட். இது அடங்கலும். இதில் சேர்ந்தவைகளும். பதிவு இல D 239/89.

2. ஷை நல்லூர் இறை 'கரம்பன் ஓடை' பர. லில இலா 4 குழி 10, 8/5-ம் கல் வீடும் கிணற்றுப் பங்கும செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு இராசையா பெண் நாகம்மாவின் ஆதனம். வடக்கு சுப்பிரமணியம் கந்தையாவின் ஆதனம். மேற்கு இக் காணியின் மிகுதிக் காணி. தெற்கு ரோட்.

பதிவு இல D 282/291.

எ. பி. பி எதிர்மன்னசிங்கம்
107, பெரியதெரு. கொமிஷனரும்,
யாழ்ப்பாணம். விலைமதிப்பாளரும்.
26-3-71 எம். 28 30-4-71

---

### ''உழவாரத் திருத்தொண்டு'' சரியைத் தொண்டை வற்புறுத்துகின்றது



பக்தர்: ''அப்பர்பெருமானுடைய குருபூசை நாளன்று இந்த பல வீடுகளிலும் உழவாரத் திருப்பணி நிகழ்ந்திருக்கிறது! நல்லை ஞான சம்பந்தர் ஆதீன கர்த்தர் தலைமையில் நல்லைச் சிவன் கோயில் திருவீதியிலும், வேறு பல சங்கங்கள் அந்தந்த ஊர்களிலுள்ள கோயில்களிலும் நடாத்தியிருக்கிறார்களாம்''!

சித்தர்: ''அப்பர் சுவாமிகள் இப்படி வாழ்ந்தார் என்பதை விளக்குதற்கு இது ஒரு சிறந்த வழியாகும்; எத்தனையோ ஆலயங்களிலுள்ள திருவீதிகள், திருக்குள மதிற் சுவர்கள், கிணறுகள் மணிக்கூட்டுக்கோபுரங்கள்என்பவை கிடக்கும் நிலை என்ன? ஆங்கெல்லாம் சைவ மக்கள் வதியவில்லையா?'' [குருபூசைத் தினத்தில் உழவாரத் திருப்பணியையொரு அங்கமாக வைப்பது ஆலயங்களைத் தூய்மை யாக வைத்திருக்கும் முயற்சியில் மக்களை ஈடுபடச் செய்தற்காகுமென்பதை நாம் கவனித்தல் வேண்டும்.]

''நாயன்மார் - நாதன்''

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இ. M B 6037

ஆறுமுகம் நடராசா கைம்பெண் மனோன்மணி, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம். —வழக்காளிகள்

எதிராக

(1) வைரவி சின்னத்தம்பி
(2) அவுரும்பிள்ளை சிங்கராசா பெண்
(3) புதுமைருக்கினி எல்லோரும் Old park வீதி,

—எதிர்வாதிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 6037 -ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1971-ம் ஆு வைகாசிமீ 28-ம் உ (28-5-71) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 5291 - 66 ம், 18-9-63 தொடக்கம் 5-5-64 வரைக்கும் ரூபாய் 4000/-க்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 22 -16 சதம் இதில் ரூபாய் 370/- குறைக்க வேண்டும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி கண்டிக்குளி கோவிற்பற்று கண்டிகுளி இறை 'இலகடி வயல்' லிலலாச்சம் 8 குழி 9 இதில் மேற்குப பக்கமாகவும் தெற்குப் பக்கமாகவும் பரப்பு லிலலாச்சம் 2 பிரிவிடுதல் செய்யப்பட்டது இந்தப் பிரிவிடுதல் செய்யப்பட்ட இரண்டு பரப்புக்கும் எல்லை கிழக்கு ரோட், வடக்கு இவ் வாதனடாப்பில் 2ம் ஆதனமாகக் குறிக்கப்படும் மிகுதி ஆதனமும் தம்பிமுத்து இராசையாவுக்குரிய ஆதனமும். மேற்கு டேவிட் பெண் சிசிலியாவிற்குரிய ஆதனம், தெற்கு சதாசிவம் கனகு பெண் நல்லம்மாவுக்குரிய ஆதனம். இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

மு. நவரத்தினராசா
கொமிசனர் & விலை மதிப்பாளர்)
''கமலபதி''
ஆஸ்பத்திரி வீதி,
மண்டைதீவு,
எம். 25 30—4—71

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இலக்கம்; M B 10685

தர்பையா சின்னத்துரை கைம்பெண் நாகேஸ்வரி B. A, தம்பிலேன் வண்ணார்பண்ணை மேற்கு யாழ்ப்பாணம் —வழக்காளி

எதிராக

1. சிவசுப்பிரமணியக்குருக்கள் சண்முகராசா சர்மா
2. பெண் பரமேஸ்வரி இருவரும் K. K. S. ரோட் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B 10685-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1971-ம் ஆண்டு வைகாசி மாதம் 13-ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 2000-ம் 16-3-69 தொடக்கம் தீர்வைத் திகதி வரைக்கும் ரூபா 1000-க்கு 5 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 284-72.

### ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை வட கிழக்கு இறை கிழவன் வளவும் நீலக்குட்டி வளவும் மயிலன் வளவும் மற்றும் துண்டுகளும் சேர்ந்து லிலப் பரப்பு 3 இதில் கிழக்குப் பக்கமாக லிலப் பரப்பு ½ யும் பயிர்வகைகளும் கிணற்றில் பாவிப்புரித்தும் இதற்கெல்லை கிழக்கு செல்லப்பா சுப்பிரமணியத்தின் ஆதனம். வடக்கு கனகசபை பெண் அழகின் ஆதனம். மேற்கு கார்த்திகேயக்குருக்கள் மகேஸ்வரக்குருக்களுக்கும் மனைவி சாரதாம்பாளுக்குமுரிய ஆதனம். தெற்கு சிருப்பர் ஒழுங்கை இதடங்கலும்.

பதிவு இலக்கம் D 263/64

''கமலபதி'' மு. நவரத்தினராசா.
மண்டைதீவு, கொமிசனரும் விலைமதிப்பாளரும்,
7-4-71 எம். 22. 30-4-71

---

## கோட்டு விற்பனவு விளமபரம

பொன்னுத்துரை மகள் இராசேஸ்வரி, குப்பிளான் —வழக்காளி

வழ. இல: M B 11068 எதிராக

(1) நாகரத்தினம் துரைசிங்கம் பெண்
(2) கமலாவதி இருவரும் புன்னாலைக்கட்டுவன் வடக்கு,

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11068-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971 ம ஆு வைகாசி மாதம் 22-ம் திகதி [22-5-71] சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 1992-67ம், 24-8-69 தொடக்கம் 9-2-70 வரைக்கும் ரூபாய் 1500/-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 336-65 கோட்டுச்செலவில் ரூபாய் 100/- கட்டப்பட்டது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டி கோவிற்பற்று வசாவிளான்இறை அம்பட்டன் கலட்டி லிலப்பரப்பு 15 இதற்கு எல்லை கிழக்கு சின்னத்தம்பி பெண் முத்துப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு வேலாயுதம் பெண் அந்தோனியாப்பிள்ளைக்குரிய ஆதனம், மேற்கு சுவாமிநாதர் ஆறுமுகத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு கந்தன் வைரவனின் ஆதனம், இதடங்கலும்.

பதிவு இலக்கம்: H 249/278

''கமலபதி'' மு. நவரத்தினராசா
ஆஸ்பத்திரி வீதி, கொமிசனர் & விலைமதிப்பாளர்
மண்டைதீவு. 21-4-71 எம். 23 30—4—71

---

## AUCTION SALE

## கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

இல: 10419

புலோலி மேற்கு,
(1) வேலப்பர் மாணிக்கம்
(2) பெண் பாலுபதிப்பிள்ளை

—வழக்காளிகள்

எதிராக

தும்பளை, சுப்பிரமணியம் குலேந்திரன் —எதிராளி

மேற்குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனத்தை 1971-ஆம் ஆண்டு வைகாசி மீ 16-ஆம்திகதி (16—5—71) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாக இருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறைக் கோவிற்பற்று புலோலி கிழக்கு மழவராயர் குறிச்சியிறை சவாணை நிலப் பரப்பு 17 இதில் வட கிழக்குப் புறமாக ½ பங்கில் வட கிழக்குப் புறமாக நிலப்பரப்பு 1 குழி 9 நீக்கி மிகுதி நிலப்பரப்பு 2 குழி 13½ சொல்லிய பரப்பும் மேற் சொல்லிய ½ பங்கிக் கருகில் தெற்குப் புறமாக நிலப்பரப்பு 1 குழி 1 சேர்ந்து ஒரே துண்டாயிருக்கிறது. கூடிய நிலப்பரப்பு 3 குழி 14½ இதில் மேற்குப் புறமாக நிலப்பரப்பு 3 கல் வீடு, பனைகள், வடலிகள், இலந்தைகள், வேம்புகளும், எல்லை கிழக்கு நடேசன் பெண் சரோஜினிக்குரியவாதனம். வடக்கு ஒழுங்கை, மேற்கு: கையொழுங்கையும், வயிரவநாதன் பெண் தங்கரத்தினத்துக்குரிய ஆதனமும் தெற்கு அப்பாசாமி நவரத்தினத்துக்குரிய ஆதனம்; இவ் வெல்லைக்குட்பட்டவைகள் முழுவதும். இக்காணிக்குத் தெற்கு கிழக்குப் புறமாகவிருக்கும் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும்.

தீர்வைத்தொகை: ரூ 1675-00
ரூபா 1000/-க்கு
12-3-69 தொடக்கம்
26-5-69வரை 10%வட்டி 20-00
ரூபா 1695/-க்கு 27-5-69
தொடக்கம் 30-5-70 வரை
5 வீத வட்டி 84-75
செலவு ரூபா181-72இதில்
கொடுக்கப்பட்ட தொகை
ரூபா 100/- நீக்கி
மிகுதி ரூபா 81-72

மொத்தம் ரூபா 1861-47

V. M கந்தசாமி
கொமிஷனருமவிலைமதிப்பாளரும்
வல்வெட்டித்துறை
22-4-71 எம், 26 30-4-71

# எண்பத்தொன்பது வயது ஆரம்பித்துவிட்டது

பண்டிதர் வ. மு. இரத்தினேசுவர ஐயருக்கு எண்பத்தோன்பது வயது ஆரம்பித்துவிட்டது. அவருடைய ஆற்றலையும் சேவையையும் பற்றி இப் பத்திரிகையில் அபிப்பிராயங்கள் வெளிவந்துள்ளன. அவருக்குப் பண்டிதமணி அவர்களும், திரு. K. P. ஹரன் அவர்களும், பிற அபிமானிகளும் நிதியுதவி புரிந்து வருகின்றனர். உடல் நிலை தளர்ச்சியடைந்த போதிலும், உள்ளம் ஈசுர பக்தியின் வலிமையினால் தெளிவாக இருக்கின்றது. இப்பொழுதும் பழைய அனுபவங்களைப் பற்றியும், புலவர்களைப் பற்றியும் சுவைபட உரையாற்றவல்லமையுள்ளவர்.

அவரை ஆறுதலாக வாழவழி வகுப்பது தமிழ் மக்கள் கடனாகும். ஐயரவர்களுக்கு ஓராளுதவி தேடிக்கொடுத்தல் அவசியம்.

## ஆலயத்தில்

### சிவமணம் திகழவேண்டும்

சாந்தையர்மடம், சைவசமய அபிவிருத்திக் கழகத்தினரால் 21-4-71 காலை 8 மணியளவில் விசேட பூசையுடன் குருபூசை விழா ஆரம்பமாகியது. விழாவுக்குத் தலைமை வகித்த சைவப் புலவர் திரு வ. கந்தசாமி ஆசிரியர் தமது உரையில் கூறியதாவது:- திருநாவுக்கரசு நாயனார் 81 வருடங்கள் வாழ்ந்து சமயப் பணி புரிந்தவர் சரியை வழிபாட்டுமுறையைத் தாமே செய்து காட்டியவர். உழவாரப் பணியைமேற்கொண்டு அன்றே சிரமதானப் பணியை உலகறியவைத்தார். ஆலயம் புனிதமாகவும், சிவமணம் வீசும் இடமாகவும் அமைய வேண்டும். நாயன்மார்களின் இலட்சியங்களை நாம் தெளிவாக அறிய வேண்டும். திருமுறைகளைப் பக்தியுடன் ஓதவேண்டும். மேலும் சகல சமய ஸ்தாபனங்களும் திருமுறையையோதுவதில் முதலிடமளிக்க முன்வர வேண்டுமென்று குறிப்பிட்டார்.

மேற்படி குருபூசையின் சார்பாக 19-4-71 முதல் 21-4-71 வரை ஆலய வீதியில் உழவாரத் திருத்தொண்டு வேலைகள் நடைபெற்றன. பல அடியார்கள் பங்குபற்றினார்கள். (நவி.)

## தீக்ஷிதரவர்கள் ஆதீனத்தால் கௌரவிக்கப் பெற்றார்

திருக்கலாய பரம்பரைத்திருவாவடுதுறை ஆதீனம் 22-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள் தில்லை ஸ்ரீ நடராசப் பெருமான் திருக்கோயிலில் ஆதீனத்தின் சார்பாக நடைபெற்று வரும் மாசி மகாபிஷேகம் முதலான பல அறங்களைச் சிறப்பாக நடாத்தி வரும் ஆதீனக்கட்டளை தீக்ஷிதரான "சகித்திய கர்த்தா" பிரமஸ்ரீ V. V. சுவர்ணவெங்கடேச தீக்ஷிதரை ஆதீனத்திற்கு அழைத்து உயர்ந்த பொன்னாடை போர்த்து கௌரவிப்பு செய்து வைத்தார்கள்.

(எமது சிதம்பரம் நிருபர்)
திரு. மா. பாலசுப்பிரமணியன்

### நாவலர் நல்வாக்கு

பாவத்துக்கு அஞ்சிப்பொருள் சம்பாதித்து, பெரியோர்களுக்கும் வறியவர்களுக்கும் பங்கிட்டு, நீயும் உண்ணு.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M. B. 8346

வீரகத்தி செல்லையா எழாலை வடக்கு, —வழக்காளி

எதிராக

(1) சூசைப்பிள்ளை அடைக்கலமுத்துவும் பெண்
(2) தீரேசமலரும்
(3) மரியாம்பிள்ளை கைம்பெண் பாக்கோவா

தெல்லிப்பளை கிழக்கு, தெல்லிப்பளை. —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் M B 8346-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுள் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971ம் ஹூ வைகாசி மீ 5-ந் திகதி (5-5-71) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 3,350/-ம், 28-7-66 தொடக்கம் 25-5-67 வரைக்கும் ரூபாய் 2,000/-க்கு 12% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 302-52 சதம் எதிரிகளால் வழக்காளிக்குக் கொடுக்கப்பட்ட தொகை, ஏற்பட்ட செலவில் ரூபா 150/- தீர்வைத்தொகையில் 27-6-68 ல் ரூபா 1,100/- 15-10-69 ல் ரூபாய் 1,000/-

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளைக் கோவிற்பற்று தெல்லிப்பளை கிழக்கிறை "நாமணக்கனோடை" நிலப்பரப்பு 5½ம் வீடும், கிணறும் தென்னைகளும் எல்லை கிழக்கு இமியன் பெண் திரேசியின் ஆதனம், வடக்கு ஒழுங்கை. மேற்கு அருளப்பு பெண் லூசாவின் உரிமையாளர்களினதும் மறுபெயர்களினதும் ஆதனம், தெற்கு மரியான் தெமியனின் ஆதனம். இவ்வெல்லைகளுக்குள் இதடங்கலும் பதிவு இலக்கம்: H 287/126

வே. கோபாலபிள்ளை
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்

22. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 26-4-71

எம் 27 30—4—71.

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில்; 2ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 30—4—1971 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்

## நாவலர்வித்திட்ட

1ம் பக்கத்து வளர்ச்சி

லூரிக்கும் தொண்டாற்றியவர்.

காந்தி அடிகள் ஆபிரிக்காக் கண்டத்தில் அடிவைத்ததும் அங்கு இந்தியர்கள் பட்ட கஷ்டத்தைக் கண்டு அவர் மனம் மாற்றமடைந்தது. மகாத்மாவாகமாறினார் பெரிய மகான்களின் வாழ்க்கையில் மறக்க முடியாத அற்புத நிகழ்ச்சிகள் சில அவர்களின் வாழ்க்கையைத் திசை திருப்புகின்றன.

திருக்கேதீச்சரத் திருப்பணி சிலகாலம் தளர்வடைந்தது. இன்னும் ஒருவர் புத்துயிர் கொடுக்க முன்வந்தார். சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் பட்டம், பதவி செல்வாக்கு இவற்றோடு வாழ்ந்தார். இன்னும் உச்சப் பதவி வகிக்க நோக்கங்கொண்டு அரசியலில் இறங்கினார். பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார் தோற்றார், மனமாற்றமடைந்தது.

சிவதொண்டு செய்ய இறங்கினார். திருப்பணியைக் கையேற்றார். மீண்டும் திருப்பணி புத்துயிர் பெற்றது இப்பொழுது கோவிலின் இராஜகோபுரம் வானளாவி நிறகும் காட்சி அன்னாரின் புகழை விளக்குகின்றது.

எஞ்சிய திருப்பணியைப் பூர்த்திசெய்து நாவலர்பெருமானின் கனவை நனவாக்க இன்னும் பணம் வேண்டும். சைவமக்களை ஆயிரம் இரண்டாயிரம் தாருங்கள் என்று கேட்கவில்லை. எல்லோரும் உறுப்பினர்களாகச் சேர்ந்து மாதம் ஒருரூபாய்; ஆண்டிற்குப் பன்னிரண்டு ரூபாய் திருப்பணிக்குச் செலுத்துங்கள் என்று திருக்கேதீச்சரத்தானினதும் கௌரியம்பாளினதும் சார்பாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். வெள்ளிக்கிழமை தோறும் ஒருநேரப் போசனத்தையாவது உண்ணாது ஒரு ரூபாவை மிச்சம பிடித்து உண்டியலில் போடுங்கள்.

இப்படித் திரட்டும் பணத்தைக் கொண்டு. களுத்துறையில் பெறும் கருங்கல்லால் அம்மையப்பனுக்கும், பரிவாரமூர்த்திகட்கும் எந்த மண்மாரி பொழிந்தாலும் எவர் படை எடுத்தாலும் சிதைக்க முடியாத ஓர் ஆலயத்தை அமைப்போம். பழைய கோவில் மண்ணாலும், செங்கற்களாலும் கட்டியபடியால் தே அழிக்கப்பெற்றது.

ஈழத்துச் சைவ மக்களுக்கு ஓர் திருப்பெருந்துறையாக இத் திருக்கேதீச்சரம் விளங்க வேண்டும் பிறவிக் கடலில் வீழ்ந்து தவிக்கின்ற உயிர்கள் திருக்கேதீச்சரத்தானின் நாமமாகிய தெப்பத்தைத் துணையாகக் கொண்டு முத்தியின்பமாகிய கரையை யடைய இப்பழம் பெருந்துறையமைய வேண்டும்.

"புதிய ஆலயங்களை அமைப்பதிலும் பார்க்கப் புராதன க்ஷேத்திரங்களின் திருப்பணியை நிறைவேற்றிக் கும்பாபிஷேகம் செய்தல் பதினாயிரம் மடங்கு விசேடம்".

வணக்கம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி நுணாவில் மேற்கு, காசிப்பிள்ளை அம்பிகைபாகர்
வழ: இல. M B 3741 எதிராக —வழக்காளி
சாவகச்சேரி' சாவகச்சேரி வடக்கு,
(1) நல்லையா சிவஞானம் (2) பெண் மகேஸ்வரி —எதிராளிகள்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டின் M B 3741-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுள் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1971-ம் ஹூ மே (வைகாசி) மீ 16-ந (16-5-71) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 3650/-ம் இதில் ரூபாய் 2000/-க்கு 29-4-69 திகதி தொடக்கம் 30-10-69 திகதி வரைக்கும் 100க்கு 10 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 340-40 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கரைச்சிப் பகுதி பச்சிலைப்பள்ளி கராச்சிக் கோவிற்பற்று குஞ்சுப்பரந்தனிறை "செட்டி ஓட்டு வயல்" நெற்பரப்பு (225ம்) இது உத்தரவுபெற்ற உலாந்தா வ் ஆறுமுகத்தால் 1945ம் ஆண்டு சித்திரை மாதம் 10ம் திகதி 353/B இலக்கப் படத்தில் 8ம் துண்டாகவும். யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 17210ம் இலக்க வழக்கில் அணைத்ததும் எல்லை கிழக்கு வல்லிபுரம் முருகேசுவின் ஆதனமும், றோட்டுக்கு ஒதுக்கப்பட்ட நிலமும் வாய்க்காலும், வடக்கு சின்னத்தம்பி கணபதிப்பிள்ளைக்கும் சகோதரனுக்குமுரிய ஆதனமும், 353/B இலக்கப் படத்தில் 9ம் துண்டு இரத்தினசபாபதி வயித்திலிங்கத்திற்கும் சகோதரனுக்குமுரிய ஆதனம். மேற்கு குறித்த படத்தின் 7ம் துண்டு சே. தம்பிப்பிள்ளை மகன் வரதனட்சுமியின் ஆதனம். தெற்கு முடிக்குரிய காணியும். ஒழுங்கையும், குளமும், இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
Commissioner & Valuer

தெல்லிப்பழை, 19-3-71

எம் 29 30-4-71.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: M B 10404

சுளிபுரம், சபாபதி கைம்பெண் வள்ளியம்மை —வழக்காளி

எதிராக

சுளிபுரம் 1 செல்லையா அமிர்தலிங்கம்
2 செல்லையா கந்தையா
3 செல்லையா முத்தையா —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M- B. 10404ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுள் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1971ம் ஆ. ஆனி மாதம் 5-ந் திகதி (5-6-71) சனிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- ரூபா 2525/-ம், 29-10-68 தொடக்கம் 31—7—69 வரைக்கும் ரூபா 2000/-க்கு 9 வீதவட்டியும் அதன் பின் முழுத்தீர்வைத்தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 405-52 சதமும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானை கோவிற்பற்று சுளிபுரம் இறை "மன்னாச்சி கலட்டியும் மன்னாச்சி தோட்டமும்" (Mannachchy Kaladdy and Mannachchi Thoddam) வி ப. 7ம். கிணறும், செய்பயிர் வான் பயிரும் எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு பண்டாரி சின்னத்தம்பியின் ஆதனம், மேற்கு நீயோ எலியாசுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு நாகநாதர் கைம்பெண் வள்ளியம்மையின் ஆதனம், இதடங்கலும்.

செ. பாண்டித்துரை
Commisioner of Sales, & Values.
கொமிஷனர், விலைமதிப்பாளர்.

மல்லாகம்.
274--71

எம் 33 30—4—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் வழ: இல. M B 11182

இராசாவின் தோட்டம் றோட்டு, M. P. S. உருத்திரராசா
யாழ்ப்பாணம். வழக்காளி

எதிராக

பலாலி றோட்டு யாழ்ப்பாணம் வைரவி மார்க்கண்டு —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11182ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுள் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970ம் ஆண்டு ஆனிமாதம் 7ம் திகதி (7-6-71) திங்கட்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 3570/-ம், 15—10—69 தொடக்கம் 25—2—70 வரைக்கும் ரூபா 2000/-க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தீர்வைத்தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 269-11 சதமும்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென் கிழக்கு இறை 'மாணிக்கன்காடு' (Manikkan Kadu) வி பர. 2 ஆல் உத்தரவு பெற்ற உலாந்தா S ஏகாம்பரத்தால் 13-3-63ல் தயாரிக்கப்பட்ட படத்தின்படி வி. பர. 2 குளி 01, 7/10 இதில் 2ம் துண்டான வி. ப. (.) குளி 15, 6/10 இந்த பிரிக்கப்பட்ட துண்டு வி. ப. (.) குளி 15, 6/10ம் வீடும், செய்பயிர் வான்பயிரும் மற்றும் உடமைகளும் இந்தக் காணியின் வடகிழக்கு மூலையிலிருக்கும் கிணற்றில் பங்கும் எல்லை கிழக்கு ஷை படத்திலுள்ள 3ம் துண்டான 06, 5/10 குளி கொண்ட பொது ஒழுங்கை. வடக்கு ஷை படத்திலுள்ள 1ம் துண்டான கணபதிப்பிள்ளை கண்ணப்புவின் ஆதனம், மேற்கு கந்தையா பெண் பூரணம்; தெற்கு பொன்னம்பலம் பெண் சரஸ்வதி இதடங்கலும் ஷை படத்திலுள்ள 3ம் துண்டான ஒழுங்கையால் போகவும் வரவும் உள்ள உரிமையும் D 299/20 ல் பதியப்பட்டது.

செ. பாண்டித்துரை
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
Commissineor of Sales & Values

மல்லாகம்.
29-4-71

எம் 32, 30-4